https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நாட்டுப்புறப்பாடல் வடிவில் அமைந்த விழிப்புணர்வுப் பாடல்கள்

**ப. உஷா**
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்; : 18233164022034
தமிழாய்வு மையம், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி)
நாகர்கோவில் - 629 003, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**முனைவர் வே. கிறிஸ்டல்**
உதவிப் பேராசிரியர், நெறியாளர், தமிழாய்வு மையம்
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி) நாகர்கோவில் - 629 003

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதன் தன்னுடைய பழமையான எண்ணங்களிலிருந்து விடுபட்டு புதிய மாற்றத்தைக் காணவும், பகுத்தறிவு சிந்தனையை வளர்த்து, மனிதன் வளர்ச்சி காணவும் உருவாக்கப் பட்டது விழிப்புணர்வுப் பாடல்கள். ஒரு மனிதனின் உணர்வுகள் மதிக்கப்பட மனிதன் நம்பிக்கையுடன் வாழ வழிகாட்டுவதற்காக தோற்றுவிக்கப்பட்டது விழிப்புணர்வுப் படல்கள். சமுதாயம் மேம்பாடு அடையவும் அதற்குரிய வழிகாட்டல்கள் மக்களிடம் போய் சேரவும் விழிப்புணர்வுப் பாடல்கள் தோற்றுவிக்கப்பட்டன. இப்படி மக்கள் வாழ்வு மேம்பட எழுதப்பட்ட பல பாடல்கள் நாட்டுப்புற வடிவில் அமைந்துள்ளன. நாட்டுப்புறப்பாடலை ஒத்த விழிப்புணர்வுப் பாடல்கள் மானுடம் பல வழிகளில் மாற்றம் பெற உதவின. நாட்டுப்புற வடிவில் எளிய நடையோடு அமைந்த பாடல்களை, படிக்காத மக்களும் எளிதில் புரிந்து சமுதாயம் மறுமலர்ச்சியடைய காரணமாக அமைந்தது என்பதை இக்கட்டுரை வழியாக அறிய முடிகிறது.*

## குறிப்பு சொற்கள்

*நாட்டுப்புறப் பாடல்கள், இலக்கியம், கும்மிப்பாட்டு, விழிப்புணர்வுப் பாடல்கள், நம்பிக்கைகள்.*

## முன்னுரை

*“நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும்” (நா.இ.ஆ.ப.13) என சு. சக்திவேல் கூறுகிறார். மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாதது போன்று மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் உள்ளோம். மொழியின் தோற்றம் உருவான போதே, மனித இனம் தன் சிந்தனைத்திறனை வளர்க்க முற்பட்ட போதே வாய்மொழி இலக்கிய வகை கருக்கொண்டது. மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன எனக் கருதப்படுகிறது. “மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள்” (நா.இ.ஆ.ப.13) என*

சு. சக்திவேல் கூறுகிறார்.

"நாட்டுப் புற மக்களின் பழக்கவழக்கங்களை யும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும்" (நா.இ.ஆ.ப.13) என்கிறார் டாக்டர் சு. சக்திவேல்.

நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புறப்பாடல்களிலே காணமுடிகிறது. இவைகள் ஏட்டில் ஏறாவிடினும் எழுத்திலே வராவிடினும் பாட்டிலே இடம் பெறாவிடினும் நம் நெஞ்சிலிருந்து மட்டும் நீங்காது நிற்கும்.

நாட்டுப்புறப்பாடல்கள் போன்ற விழிப்புணர் வுப் பாடல்கள் மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு இயற்றப் பட்டுள்ளன. நாட்டுப்புறப் பாடல் களும், விழிப்புணர்வுப் பாடல்களும் ஒரே இலக்கண வரைமுறையோடு காணப் படுகின்றன. இதனை,

**"மரம் போல் வர கடலுண்டு**

**மடி நிறைய மீனுமுண்டு**

**இரவெல்லாம் கண் விழிச்சாலும் விடியல் வாழ்வுண்டு**

**ஏலம்மா ஏலோலோ – ஏலம்மா ஏலேலோ"** (அ.கா.ப.238)

என்னும் பாடல் வழி அறியமுடிகிறது.

## பழமொழிகள்

"மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி" (நா.இ.ஆ.ப.103) என சு. சக்திவேல் கூறுகிறார். நினைப்பிற்கு எட்டாத பழங் காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதைச் பழமொழியிலுள்ள "மொழி" என்னும் சொல் உறுதிப்படுத்து கிறது. சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியை யும் அறிவுக் கூறுகளையும் விளக்கும் சான்றாகப் பழமொழிகளும் விடுகதைகளும் திகழ்கின்றன. உலகிலுள்ள அனைத்து மொழி களிலும் பேச்சு மொழியே முதன்மையானது என்பது அனைவரும் அறிந்ததே. ஆங்கிலச் சொற்களான Sayings old sayings என்பதை நோக்கின் இவ்வுண்மை புலனாகும்.

தமிழில் பழமொழிக்கு மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல் என ஆறுபொருள் இருப்பதாகச் சேந்தன் திவாகரம் கூறுகின்றது. மலையாளத் தில் 'பழஞ்சொல்' என்றும் தெலுங்கில் 'நாதுடி' என்றும் கன்னடத்தில் 'நாண்ணுடி' என்றும் ஆங்கிலத்தில் "proverb" என்றும் அழைக்கின்றனர். "தமிழ் இலக்கிய, இலக்கணங்களை ஆராய்ந்து பார்த்தால், பழமொழியைக் குறிக்க முப்பத்தி நான்கு சொற்கள் இருப்பதாக சு. சக்திவேல்; (நா.இ.ஆ.ப.103) என்ற நூலில் குறிப்பிடுகிறார்"

அனுபவ முதிர்ச்சியிலே பிறந்த பழமொழிகள் சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய இயல்புகளால் மாறாத அமைப்புடன் (Fixed Phrases Genre) பயின்று வருகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களிலே குறுகிய அமைப்புக் கொண்ட பழமொழிகளும் விடுகதைகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தன. மக்கள் மனதிலே ஆழமாகப் பதிந்து நற்செயலைத் தூண்டச் செய்வன. "பழமையான நம்பிக்கை களையும் வரலாற்றினையும் பண்பாட்டி னையும் மனிதஉணர்வுகளையும் காட்டுபவை பழமொழிகள்" (நா.இ.ஆ.ப.104) என்று சு. சக்திவேல் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியர் பழமொழியை முதுமொழி, முதுசொல் என்ற பெயரால் அழைக்கிறார்.

**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்**

**எண்மையும் என்று இவை விளங்கத்தோன்றிக்**

**ஏது நுதலில் முதுமொழி என்ப"** (தொ.சொ.செய்.165)

என்பது தொல்காப்பிய நூற்பா.

நாட்டுப்புறப் பாடல்களில் பழமொழிகள் பயின்று வருவதைப் போன்று விழிப்புணர்வுப் பாடல்களிலும் பழமொழிகள் பயின்று வருகின்றன.

**"குட்ட குட்ட குனிந்து நின்னா**

**குட்டுறவன் ஓயமாட்டான்"** (அ.கா.ப.123)

**"புலி பசிச்சு கிடந்தாலும்**

**புல்ல தின்ன மாட்டாது"** (அ.கா.ப.220)

## நம்பிக்கைகள்

நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் பாதுகாக்கப் படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்.

**"மனிதனின் அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட**

**எண்ணங்களையே நம்பிக்கைகள்"** (நா.இ.ஆ. ப.168) என்று சு. சக்திவேல் குறிப்பிடுகிறார். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப் படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாகத் தொடர்ந்துவரக் காண்கிறோம். நம்பிக்கைகள்பெரும்பாலும் அச்ச உணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுது மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுது மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.

நம்பிக்கைகள் காலம் காலமாகவே வரக் கூடிய ஒன்றாகும். மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளுக்குக் காரணம் அறிய முடியவில்லை என்றாலும் மனித சமுதாயம் நம்பிக்கைக்கு உட்பட்டுச் செயல்படுகிறது. பண்டைக்காலம் முதல் சகுனம் பார்க்கும் நம்பிக்கை சமுதாயத்தில் இருந்து வந்துள்ளது. அந்த நம்பிக்கைகள் இக்காலம் வரை நிலவி வருகிறது என்பதை விழிப்புணர்வுப் பாடல் வழி அறிய முடிகின்றது.

**சகுனம் பாத்து சகுனம் பாத்து**

**சந்தியிலே போனே – நீ**

**பாம்பை கண்டு அலறுறா**

**பல்லியும் கத்துனா பதறுதே**

**விதவை பொண்ணு வீதியில வந்தா**

**வீணா பேசி பழிக்கிற** (அ.கா.ப.121)

இவ்வாறு யாரேனும் ஒரு நல்ல காரியத்துக்குப் புறப்படும் போது விதவைப் பெண்ணை கண்டால் கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர் என்பதை விழிப்புணர்வுப் பாடல் வழி அறிய முடிகின்றது.

**தெய்வங்கள்**

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதனடிப் படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக் களும் தோற்றம் பெற்றன. பலிகள் தருவதன் மூலம் இயற்கையினை வயப்படுத்தி விடலாம்என்ற அடிப்படையில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தோன்றின. காலப் போக்கில் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினர். இவ்வாறு மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பழங்கால மனிதன் இடி, மழை, மின்னலைக் கண்டு அஞ்சினான். நோய் முதலியவற்றிற்கு ஆவிகளே காரணமென எண்ணினான். எனவே அந்த ஆவிகளை வழிபட ஆரம்பித்தான். "இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படை காரணம் என்கிறார்" (நா.இ.ஆ.ப.222) உளவியல் பேரறிஞர் சிக்மண்ட பிராய்டு.

"கோயிலிலா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியே தமிழகத்தில் வழங்கப் படுகிறது. நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர்.

"நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற தெய்வங் களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும்வழிபடுகின்றனர்" (நா. இ. ஆ ப. 222) என சு. சக்திவேல் கூறுகிறார்.

தெய்வங்களில் சிறுதெய்வம், பெருந்தெய்வம் என இரு பிரிவு உண்டு. சமூகத்தில் உயர்வு, தாழ்வு போன்ற பாகுபாடுகள் தோன்றியது போல தெய்வங்களில் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என இரு பாகுபாடுக் காணப்படுகிறது. ஒவ்வொரு குலத்திற்கும் ஒவ்வொரு தெய்வம் உண்டு.

**"மதுரை மீனாட்சிக்கும் காஞ்சி காமாட்சிக்கும்"** (அ.கா.ப.60) என்ற பாடல் வரியால், விழிப்புணர்வுப் பாடலில் பெண் தெய்வ வழிபாடும் இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

## கும்மிப்பாட்டு

"தமிழக நாட்டுப்புற பெண்களிடையே பொதுவாகக் காணப்படும் ஆடல் வகை கும்மி. இது பல பேதையரும் பெதும்பைய ரும் வட்டமாகச் சுற்றி வந்து பாடிக் கை குவித்தடிக்கும் கூத்து கும்மி எனப்படும். கை குவித்தடிக்கும் விளையாட்டாதலால் இது கும்மி எனப்பட்டது" (தமிழ் நாட்டு விளையாட்டுகள் ப.133).

நாட்டுப்புறப் பாடல்களைப் போன்று விழிப்புணர்வுப் பாடல்களிலும் பெண்கள்

*கல்விச்சுடர் ஏந்தி வந்து கல்விக் கற்று வீட்டில் விளக்கை ஏற்ற வேண்டும் என்று கூறி கும்மியடிக்கிறார்கள்.*

*இதனை,*

**"கும்மியடி பெண்ணே கும்மியடி – நீ**

**குலுங்கிக் கைகொட்டி கும்மியடி**

**கல்விச் சுடர்களை ஏந்தி வந்து – நம்**

**வீட்டில் விளக்கை ஏத்துங்கடி"** *(அ.கா.ப.24)*

*என்ற விழிப்புணர்வுப் பாடலில் இக்கும்மி யடித்தல் நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளது.*

### வட்டார மொழிநடை

*மொழி என்பது மனிதனுக்கு இயற்கையாக அமைந்த ஒன்றன்று. மனிதன் அமைத்துக் கொண்ட ஒரு கருவியாகும்.*

*"நடை" என்ற சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல் ஸ்டைல் (ளுவலடந) இது ஸ்டைலஸ் (*stylus*) என்ற இலத்தீன் சொல்லி லிருந்து வந்ததே. இச்சொல்லின் பொருள் ரோமானியர் எழுதப் பயன்படுத்திய எழுதுகோல் என்பதாகும். நடையைப் பற்றி 'ஜனதன் ஸிப்ட்' குறிப்பிடுகையில் தகுந்த இடத்தில் தகுந்த சொல் என்று குறிப்பிடுகிறார். மேலும் 'போலி' என்பவர் நடை என்பது சொற்கள் கூட்டிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்வு செய்வது என்று கூறியுள்ளார்.*

**"கீழாண்ட சுவத்தோரம் மறந்தும் போகாதீங்க**

**கருநாகம் வெடிப்புல தான் இருக்குது – அம்மா**

**மேலாண்ட கூரமேல சாக்கைக் கிளிச்சுப் போடம்மா**

**மேக்கத்தி மளெ அடிச்சுப்புட்டா இருக்கும் இடமும் நனையுமா"** *(அ.கா.ப.157)*

*இப்பாடலில் கீழாண்ட மேலாண்ட, மேக்கத்தி போன்ற வட்டார வழக்குச் சொற்களைக் காணமுடிகிறது.*

*செந்தமிழ் நடையின்றி நாம் அன்றாடம் பயன்படுத்தும் பேச்சுத் தமிழில் பேசுவதை அப்படியே செய்திகளில் கூறுவது பேச்சு நடை ஆகும்.*

**"ஓலையில் எழுதி வச்ச காலம் போயாச்சு — இந்த**

**ஊருக்குள்ள அச்சடிச்ச புத்தகம் வந்தாச்சு**

**ஆயிரமா சேதி சொல்லும் அழகு புதுமையெப்பாரு – அது**

**சொல்லப் போற கதையை கொஞ்சம் கேளு"** *(அ.கா.ப.250)*

*என்னும் பாடலில் பேச்சுமொழிநடை அமைந்துள்ளது.*

*பாமர மக்கள் புரிந்து கொள்ளுமாறு விழிப்புணர்வுப் பாடல்கள் நாட்டுப்புற நடையிலும் இருத்தல் அவசியம் நாட்டுப்புற மக்களின் பேச்சு வழக்கு சொற்கள் பாடல்களில் பயின்று வந்துள்ளன என்பதை,*

**"மனசில ஆசையெல்லாம் மல்கா**

**மறஞ்சி கிடக்குதடி ரேணுகா**

**ஒண்ணொண்ணா சொல்லவா – நான்**

**ஒத்தக்கிளி அல்லவா**

**ஒத்தக்கிளி பாடும் பாட்ட ஒக்காந்து நீ கேட்கவா"** *(அ.கா.ப.53)*

*என்னும் பாடலால் அறிந்து கொள்ள முடிகிறது.*

### முடிவுரை

*மனிதனுக்கு இயற்கையாக அமைந்த மொழியின் வட்டார வழக்கு நடை, பேச்சு மொழிநடை, நாட்டுப்புற மொழிநடை ஆகியவை விழிப்புணர்வுப் பாடல்களில் கலந்து அமைந்துள்ளதால் மக்கள் பாடலின் கருத்துகளை எளிதில் அடையாளம் கண்டு அதன் வழியாக தங்கள் வாழ்வை மேம்படச் செய்துள்ளார்கள்.*

### பார்வை நூல்கள்

- ♦ *நாட்டுப்புறவியல் இலக்கியங்கள் - முனைவர் ஆறு. இராமநாதன்*
- ♦ *நாட்டுப்புற இயல் ஆய்வு-முனைவர் சு. சக்திவேல்;*
- ♦ *அறிவியல் கானம் விழிப்புணர்வுப் பாடல்கள்-மகளிர் கல்வி விழிப்புணர்வு மற்றும் உரிமைகள் சங்கம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் - கன்னியாகுமரி மாவட்டம்*